## 1) கோடைப் பொருநன் கடியநெடு வேட்டுவன் - கொடைக்கானல் மலை

கொங்கு நாட்டின் தெற்கெல்லையாகத் தென்கோடியில் உள்ளது கோடை மலை. இது பழனி மலைத் தொடரின் தென்கோடியாகும். கொங்குநாட்டினைச் சேர்ந்த இம்மலை இப்பொழுது கொடைக்கானல் என்றழைக்கப்படுகின்றது. வளம் பல பொருந்திய இம்மலை நாட்டின் வடசாரலின் அடிவாரத்தில் கடியம் என்னும் ஊர் இருந்தது. இது கோடைமலை நாட்டின் தலைநகராகும். இவ்வூரிலிருந்து நெடுவேட்டுவன் என்கின்ற கொங்கு வேளிர் குடித்தலைவன் வீரமும், ஈரமும் மிக்கவனாக திகழ்ந்து ஆண்டுவந்தான். கொடைக்கானல் எனப்படும் கோடை மலைக்கு அரசன் சங்க காலத்தில் இவனே ஆவன். வேடர் குலத்தைச் சேர்ந்த இவன் பாண்டியன் கோடைப் பொருநன்.

தண்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிரை கொடுக்குந் துப்பன் தன்மலைத்
தெறலரும் மரபின் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மரா அ யானை
மொழியின் உணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி இரவலர்க் கீயும்
வள்வாய் அம்பற் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு கேள்வியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்பு

- (அகநானூறு: 13-1-12 வரிகள்)

## ௨) விச்சிக்கோன் - இச்சிமலை

விச்சிக்கோன் ஆண்ட மலை விச்சி மலை ஆகும். இது கொல்லிமலைச்சாரலில் அமைந்துள்ள பச்சைமலை ஆகும். இவனுடைய இனத்தவர் விச்சியர் என அழைக்கப்பட்டனர். அதாவது வில் வித்தையில் சிறந்தவர்கள் என்ற பொருளாகும். இவனுடைய தம்பி இளம் விச்சிக்கோன் ஆவான். இவனுடைய ஊர், பிற வேட்டுவ வேளிர்களுடையது போலவே சிற்றரசனைக் கொண்ட குறும்பூர் ஆகும். கபிலர் விச்சிக் கோனிடம் பாரியின் மகளிரை மணஞ் உடன்படாமல் மறுத்து விட்டான். கபிலர் பாரி மகளிரை அவன் செய்து கொள்ளும்படிக் கேட்டார். ஆனால் அவன் அதற்கு மணம் புரிந்து கொள்ளும்படி கேட்ட பாடல் புறம் 200 ஆகும்.



# 3) ஆஅய் அண்டிரன் - பொதியில் மலை

ஆஆய் என்பது இவனது வேடர்குலக் குடிப் பெயர். எனவே அண்டிரன் என்னும் எயினன் (வேட்டுவன்) ஆகிய இவனை ஆஅய் அண்டிரன் என்றும் ஆஅய் எயினன் என்றும் புலவர்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவன் வேனாட்டின் அரசனாக இருந்ததால் வேள் ஆஅய் எனப்பட்டான்.

ஆய் நாட்டை வேணாடு என்பார்கள் வேள் + நாடு வேணாடு எனப்பட்டது. இந்த நாடு பாண்டிய நாட்டிற்குத் தென்மேற்கில், பேரியாற்றுக்கும், குமரி முனைக்கும் இடையில் திருவாங்கூர் நாட்டின் தென் பகுதியில் இருந்தது. ஆயின் மலைகள் பொதியில் மலை மற்றும் கவிர மலையாகும். ஆய் பொதியில் மலையின் அடியிலிருந்து வேணாட்டை ஆண்டான்.



# 4) ஆய் அண்டிரனின் உறவினன்

பொதியில் மலையின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். சேர்ந்த காட்டில் சிறு அரண் சூழ்ந்த அழுந்தூரிலிருந்தது, திதியனின் அழுந்தூர்.

நெடுங் கொடி துடங்கும் நறவு மலி பாக்கத்து
நாள் துறைப்பட்ட மோட்டு இரு வரா அல்,
துடக்கண் கொழுங்குறை நொடுத்து உண்டு ஆடி
வேட்டம் மறந்து துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டி,
ஆம்பல் அகல் இலை அமலை வெந்சோறு
தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து
விடியல் வைகரை இடூஉம் ஊர!
தொடு கலம் குறுக வாரல்! தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல் தெறுவர,
ஒன்று மொழிக் கோசர்க் கொன்று முரண் போகிய
கருந்தேர்த் திதியன் அழுந்தை கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்
நின் நலத் தகுவியை முயங்கிய மார்பே

- அகநானூறு : 196

பாடலின் பொருள்:-

தலைவி, தலைவன் மீது ஊடல் கொண்ட நிலையில் கூறியதாய் அமைந்த பாடல். பாக்கத்தில் உள்ள பாணர்கள் கடல் துறையிடத்தே அகப்பட்டவரால் மீனின் கொழுத்த துண்டுகளை விற்று அதனைக்கொண்டு கள்ளினை வாங்கி அருந்திக்களித்தனர்.

பழனி மலைக்கு இந்த ஆவியர் குடியினரால் ஆவின்குடி, திருஆவிநன்குடி என்ற பெயரும் உண்டு. பழனி மலைக்குப் பக்கத்தில் உள்ள ஆவியர் குடியே தற்பொழுது ஆய்க்குடி என்றழைக்கப்படுகின்றது.



# 5) வீரை வேண்மான் வெளியன் தித்தன்

*திருச்சி மலைக்கோட்டை, பொன்மலை*

உறந்தைக் காவலன் ஆன இவனை தித்தன் உறந்தை என்றே அழைத்தனர். தித்தன் வீரை என்னும் ஊரின் அரசன் ஆவான். வேண்மான் வெளியன் தித்தன் உறைந்த ஊராகியதால் வீரை என்னும் பெயர் பெற்றது. வெளியன் வேண்மான் ஆ அய் எயினன், திதியன் போலவே தித்தனும் வேட்டுவ வேளிர் ஆவான். ஆனால் இவன் அவர்களை விடத் தொன்மையானவன். தித்தனின் வரலாற்றில் தித்திக்கும் மற்றும் திகைக்க வைக்கும் சங்கதிகள் நிறைய உண்டு.

மற்ற வேட்டுவ வேளிர்க்கு இல்லாத தனிச் சிறப்பு தித்தனுக்கு உண்டு. புலவர்கள் தம்மைப் புகழ்ந்து பாமாலைகள் சூட்டி புகழ் மாலைகளாக அல்ல அல்ல புகழ் மலைகளாக அவைகள் குவியும் வரை வீரத்திலும், ஈரத்திலும் அவர்கள் ஓயவில்லை. ஆனால் அவர்கள் காலம் எல்லாம் எதற்காக ஏங்கினார்களோ, அந்தக் கவி படைக்கும் தனி ஆற்றலும் இவனே பெற்றிருந்தான். புரவலனே புலவனாகவும் இருந்துள்ளான். அதுவும் எப்படி? அந்த செய்யுள்களைப்படித்து புலவர்களே ரசித்து அனுபவித்துப் பாராட்டும் வண்ணம் சொல், பொருள், நடை எல்லாமே சிறப்பாக அமைந்திருக்கும் வண்ணம் படைத்தளித்துள்ளான். புறநானூறு 320 வது பாடலும், அகநானூறு 188 வது பாடலும் இவ்விரு நூல்களிலும் முதலிடம் வகிக்கின்றன.

புறநானூறு 320 வது செய்யுளை இயற்றியவர் வீரை வெளியனார் ஆவர். இவர் வீரை வெளியன் வேண்மான் தித்தன் அல்ல என்று தமிழறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால் வீரை வேண்மான் வெளியன் தித்தன் இயற்றிய அகநானூறு 188 வது பாடலும், புறநானூறு 320 வது பாடலும் ஒரே விதமான சுவைநயம் மிக்கதாக இருப்பதால் இரண்டு பாடலும் தித்தனால் இயற்றப்பட்டதே என்பதைத் தமிழறிஞர்கள் பலர் கூறுகின்றனர்.

நாங்கள், கோயில்களைப்பற்றி எழுதும் கட்டுரைகளில், இறைவனையே அவன், இவன் என்றுதான் குறிப்பிடுவோம். அவன் அருளால் அவன்தாள் பணிந்து என்றுதான் மாணிக்கவாசகர் குறிப்படுகின்றார். இறைவன் என்றுதான் குறிப்படுகின்றோமே தவிர



இறைவனார் என்று குறிப்பிடுவது இல்லை. ஆனால் புவியரசன் ஆகிய வீரை வேண்மான் வெளியன் தித்தன் கவியரசன் ஆன உடன் ஆர் விகுதியினைப் பெற்று வீரை வெளியனார் என்று குறிப்படுகின்றார். நான் முன்பே குறிப்பிட்டது போல் கல்வியே வீரத்தையும், செல்வத்தையும் மிஞ்சிவிட்டது.

வேட்டையிலும் வல்வில் ஓரிக்கு இணையாகத் திகழ்ந்துள்ளான். வீரத்திலும் வித்தியாசம் காட்டியுள்ளான். அவன் கிணை என்றும் போர்ப் பறையை ஒலிக்கக் கேட்டே பெரும் சேனையோடு வந்த கட்டி என்னும் வேளிர், கிள்ளி வளவனுடன் போர் புரியாமலே ஓடிவிட்டான். இதுவும் போர் பற்றிய வரலாற்றிலேயே புதுமையான ஒன்றல்லவா? போர் புரியாமலே பகை வென்ற புதுமையைச் செய்து உலக வரலாற்றிலேயே ஒற்றை நாயகனாக ஒளிவிடுகின்றான்.

இவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் படைத்தலைவன் பொன்னியில் செல்வன், புதுமை பல படைத்தவன். உறந்தை எனப்பட்ட தற்பொழுதிய உறையூரின் காவலன். தமிழ் வல்லவர்களின் காதலன். பகைவர்க்குக் காலன். உறையூர், சோழப் பெரு வேந்தர்கள் முடிசூட்டிக்கொள்ளும் பழம்பதிகள் ஐந்தில் ஒன்றாகும்.

தித்தனின் முரசு ஒலி, சங்கொலி முழங்காத மாலை வேளை.

பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர் சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின் கண்ணகத்து எழுதியகுரீ இப் போலக் கோல்கொண்டு அலைப்பப் பபீ இயர் மாதோ வீரை வேண்மான் வெளியன் தித்தன் முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின் வெண்கோடு இயம்ப, நுண்பணி அரும்பக் கையற வந்த பொழுதோடு மெய் சேர்த்து அவல நெஞ்சினன் பெயர உயர்திரை நீடு நீர்ப் பனித்துறைச் சேர்ப்பன் ஓடுதேர் நுண்நுகம் நுழைந்த மாவே!

தித்தனின் முரசு ஒலி, சங்கொலி முழங்காத மாலை வேளை.

“பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத்து எழுதியகுரீ இப் போலக்
கோல்கொண்டு அலைப்பப் பபீ இயர் மாதோ
வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோடு இயம்ப, நுண்பணி அரும்பக்
கையற வந்த பொழுதோடு மெய் சேர்த்து
அவல நெஞ்சினன் பெயர உயர்திரை
நீடு நீர்ப் பனித்துறைச் சேர்ப்பன்
ஓடுதேர் நுண்நுகம் நுழைந்த மாவே!” – நற்றினை – 58

**போரவைக் கோப்பெரு நற்கிள்ளி தித்தனின் மகன்**

தித்தன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னனின் தளபதியாக இருந்த காரணத்தால் பிரியத்தைக் காட்ட சோழன் கோப்பெரு நற்கிள்ளி எனப் பெயரிட்டுள்ளான். பேரவை என்பது அவன் பட்டப் பெயராக இருக்க வேண்டும். பேராண்மை மிக்க நற்கிள்ளி, ஆமூர் மல்லனிடம் போரிடும் வீர நிகழ்வினை, தித்தன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பார்த்தே ஆக வேண்டும் என்று புலவர் சாத்தந்தையார் ஆசைப்படுகின்றார்.

சிந்து சமவெளியில் கிடைத்த முத்திரைகளில் தித்தன் என்ற பெயர் பொரித்திருப்பதிலிருந்து இவன் சிந்து வெளி நாகரீகக் காலக் கட்டத்தைச் சேர்ந்தவன் என்பதும் நன்மரக்கலம் கொண்டு கடல் கடந்து அயல் நாட்டு வாணிபத்தின் அதிகப் பொருள் ஈட்டி, முத்திரை பதித்த காசுகளை வெளியிடும் அளவிற்கு முக்கியமானவனாகத் திகழ்ந்துள்ளான். சங்ககால வேளிர்களிலும் தனி முத்திரை பதித்தவன். சரித்திரத்தில் இடம் பெற்று சாகா வரம் பெற்றவன்.

# 6) போரவைக் கோப்பெரு நற்கிள்ளி

இவன் வீரை வேண்மான் வெளியன் தித்தனின் மகன். ஐயை-யின் சகோதரன். வீரனுக்குப் பிறந்த மாபெரும் வீரன். இவன் ஆமூர் மல்லனுடன் போர் புரியப் போகும் அதிசய நிகழ்ச்சியை அவன் தந்தை காண வேண்டும் என்ற எண்ணத்தோடு புலவர் சாத்தந்தையார் எழுதிய பாடல்.

*பேரவைக் கோப் பெரு நற்கிள்ளியின் மற்போர்*
*இன் கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்*
*மைந்துடை மல்லன் மதவலி முருக்கி,*
*ஒருகால் மார்பு ஒதுங்கின்றே ; ஒருகால்*
*வருதார் தாங்கிப் பன் ஒதுங்கின்றே*

*- புறநானூறு - 80*



# 7) கொடுமுடி குறும்பொறை மலை

ஈரோட்டிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில், காவிரி நதிக்கரையின் மீது அமைந்துள்ள கறையூர், கொடுமுடி என்னும் சங்க கால வேட்டுவ வேளிர் ஆண்ட ஊராகும். அருள்மிகு. கொடுமுடி நாதர் பெயரே தனக்குச் சூட்டப்பட்டதால் இந்த அரசன் பெயர் கொடுமுடி என்பதாகும். தேவாரப் பாடல்களில், தேவாரம் பாடிய மூவருமே கறையூர் என்றே இவ்வூரை அழைத்த பொழுதும் இம் மன்னனின் மாவீரத்தைப் போற்றும் விதத்தில் கொடுமுடி என அழைக்கத்தொடங்கினர்.


பாண்டிய அருள்மிகு. கொடுமுடிநாதர் என்றும் அருள்மிகு. மகுடேஸ்வரர் மன்னன் மலையத்துவச பாண்டியன் இத்தலத்து இறைவனை வேண்டி வணங்கித் தனது மகனின் அங்கம் (கைவிரல்) வளரப் பெற்றதால், அங்கம் வளர்த்தபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதனால் இறைவன் மீது அபாரப் பற்றும், அதீதப் பக்தியும் உற்ற வேட்டுவ மன்னன் இந்த எழில்மிகு ஆலயத்தை எடுப்பத்ததால் திருப்பாண்டியக் கொடுமுடி என்ற பெயரையும் இவ்வூர் பெற்றது.

கொங்கின் ஏழு சிவத் தலங்கள் :
தேவாரப் பாடல் பெற்ற கொங்கு ஏழு சிவத் தலங்களில் "கொடுமுடி"யும் ஒன்றாகும், மூவராலும் பாடப் பெற்ற ஒரே தலம் ஆகும்.

1.கரூர் - சம்பந்தர்
2. வெஞ்சமாக் கூடல் - சுந்தரர்
3. கொடுமுடி - அப்பர், சுந்தரர், சம்பந்தர்
4. திருநணா (பவானி) - சம்பந்தர்,
5. அவினாசி - சுந்தரர்
6. திருமுருகன் (பூண்டி) - சுந்தரர்
7. திருச்செங்கோடு - சம்பந்தர்

பாடி அருளியுள்ளனர். அப்பரும், சம்பந்தரும் கி.பி.7 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். சுந்தரர் கி.பி.8-ஆம் நாற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவர். திருஞானசம்பந்தர் பாடி அருளியது. 2 ஆம் திருமுறையாகும்.

கொங்கு நாட்டின் ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட "கொடுமுடி" மிகச் சிறந்த போர் வீரன் ஆவான். கோட்டை கட்டி ஆண்டவன். இவனது கோட்டையில் மழைபோல் அம்புகளை வீசும் திறன் கொண்ட ஐயவி, அகப்பா போன்ற போர்ச் சாதனங்கள் பொருத்தப் பட்டிருந்தன. மும்மூர்த்தித் தலமான திருப்பாண்டிக் கொடுமுடி இறைவனுக்கும், இந்த வேட்டுவ ராஜாவிற்கும் இடையில் நாம் அறிய முடிந்த ஆனால் உணர முடியாத தொடர்புகள் உள்ளன.



# 8). திதியன்

நலம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான பொன் இணர் நறுமலர்ப் புன்னை வெஃகி திதியனோடு பொருத அன்னி போல விளிகுவை கொல்லோ, நீயோ கிளி எனச் சிறிய மிழற்றும் செவ்வாய், பெரிய கயல்என அமர்ந்த உண்கண், புயல் எனப் புறம் தாழ்பு இருளிய பறங்கு குரல் ஐம்பால் மின்நேர் மருங்குல் ; குறுமகள்
பின்னிலை விடாஅ மடம் கெழு நெஞ்சே.

*பாடலின் பொருள் :-*
*தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறி வருந்தியது.*

நெஞ்சே! நீயும் உன் எண்ணங்கள் தான் பெரிது எனவும், உண்மை எனவும் எண்ணிப் பல சமயங்கள் பெரிதும் வருந்தித் துன்புறுகின்றாய். அச்சம் தரும் மலையில் பறந்து கடலில் கலக்கும் காவிரி ஆற்றில் பாண்மகளின் அண்ணன்மார்கள் நள்ளிரவில் சென்று பெரியவாளை மீன்களைப் பிடித்து மறுநாள் விடியலில் கொண்டு வருவார்கள்.

அழகிய பாண்மகள் அவைகளைக் கள்ளுக்கும், நெல்லுக்கும் தெருவில் விற்காமல் பெரிய முத்துக்கள் பதித்த நல்ல அணிகலன்களைப் பெற்றச் செல்லுதற்கு இடமான வளம் மிக்க ஊர்களையும், பலவேற்படைகளையும் உடையவன் எவ்வி என்பவன்.

மோதிரம் வெள்ளலூர் பாயும் புலி உருவம் பொறித்த திரம், கழுத்து அணி,
வெள்ளநார், சுடுமண் காதணிகள், மகர மோதிரம், பாயும் புலி உருவம் பதித்த மோதிரம், கழுத்து அணி.

கல்தோன்றி மண்தோன்றாக் காலமுத லாநாங்கள்
மல்வலயத் தோள்கொண்டு மாவலியர் எனஇருந்து
காவலராய் கொங்கர்களாய் கமழ்அரசு புரிநாட்டில்
தாவளம்சேர் மன்னனுந்தான் தனியரசாச் செய்ததனால்
கொங்கன்என எம்நாமம்

நலம்தருஞ்சீர்ப் பெருங்கீர்த்தி நிலைபெறு பாண்டியனின்
குலம்பெருக வந்துதித்த கோவேந்தர் ஐம்பிரியர்
பூவலியர் மாவலியர் பொற்புமிகும் காவலியர்
சேவகமே மிகுவேடர் செம்மைமிகு வெட்டுவர்கள்



# கொங்கு வேட்டுவ வேந்தர்கள் ...

1. தலையூர் காளிங்க அரையர் சுந்தர பாண்டிய சோழகோன்
2. அல்லாள இளைய நாயக்கர்
3. கடிய நெடு வேட்டுவன்
4. வீர வெஞ்சமன்
5. செயங்கொண்ட சோழ கொங்காள்வான்
6. கொங்கு ராயர்

திருஉவப்படமும் வரலாறும் :

## 1.தலையூர் காளி மன்னர்



கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளி மன்னர் கொங்கு 24 நாட்டின் தலைமை நாடாம் தலைய நாடு. அத்தலைய நாட்டிற்கு தலையூர் எனும் ஊரே தலைநகராகும். அத்தலைய நாட்டின் மாமன்னர் நம்பினோரை கைவிடாத நட்பின் இலக்கணம் போற்றும் கொங்கு தலையூர் மாமன்னர் தலையூர் காளி மன்னர் ஆவார்.இவர் கொங்கர் இனத்தை சார்ந்தவர். வேட்டுவர் குலத்தை சார்ந்தவர். போரில் முரட்டுத்தனமாக தண்டேறி எறிபவர். இவருடைய வம்சத்திற்கு தண்டேறி முத்துராஜா பட்டமுண்டு. இவர் வேட்டுவர்களின் பாரம்பரியமான குலதெய்வமான காளி எனப்படும். கொற்றவை எனப்படும் போர்த்தெய்வத்தை வணங்க கூடியவர். இவர் மிகச்சிறந்த காளி பக்தர் என்பதனால் வெற்றித்திலகம் நெற்றியில் இடும் பழக்கமுடையவர். இவர் பிறந்த வேட்டுவர் குலத்தை தழைக்க வைப்பதற்காக போர்க்களத்தில் சூழ்ச்சி வலை பின்னபட்டபோது தன்னுடைய கொற்றவை குல தெய்வமான தலையூர் பிரம்மகாளி தேவி இடம் வணங்கி சத்தியம் காக்கும் கொங்கு வேட்டுவர் குல அரச வம்சம் சத்தியமாய் வெட்ட வெட்ட தழைக்கும் என தன்னுடைய கொங்கர் படைக்கு வரம் வாங்கியவர். பொன்னர்சங்கர் கதையின் வெற்றித்திருமகன் ஆவார்.

# உ. அல்லாள இளைய நாயக்கர்



<u>அரைய நாட்டு மாவீரன் அல்லாள இளையான்</u>

கொங்கு 24 நாட்டில் அரைய நாட்டில் பரமத்தியில் கோட்டை கட்டி விஜய நகர பேரரசின் கீழ் சிற்றரசராக மழகொங்கு நாட்டை ஆட்சிபுரிந்து வந்தார். விஜய நகர வேந்தரால் இவருக்கு நாயக்கர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவர் மூல வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். இவர் ஜேடர்பாளையத்தில் ராச வாய்க்கால் வெட்டி அணைகட்டினார். மேலும் கொமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் போன்றவற்றையும் வெட்டியுள்ளார்.

இவர் 72 பாளையப்பட்டுக்களின் தலைமை பாளையப்பட்டுக்காரர் ஆவர். மந்திரக்கோல் வைத்து ஆட்சிபுரிந்தவர். கொல்லிக்கிரியை உடையவர். இவருடைய ஆட்சி அதிகாரம் சேலம்,ஆத்தூர், ஆறகளூர் வரை பரவி இருந்தது குறிப்படத்தக்கது. மழகொங்கு சித்திரமேழி சபை அதிகாரம் இவரிடமே இருந்தது. இவரை வாளரசர் மணவாளர் என்றே இவருடைய செப்பேடு கூறுகிறது.

# 3. கடிய நெடு வேட்டுவன்

கோடை மலையை ஆண்ட கடியநெடுவேட்டுவன். கடிய நெடு வேட்டுவன் சங்ககால மன்னர்களில் ஒருவர். கோடை மலையை (இன்றைய கொடைக்கானல் மலையை) ஆண்ட மன்னர் ஆவார். இவர் வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். இவர் நாயுடன் வேட்டைக்கு செல்லும் பழக்கமுடையவர். இவர் நாய்களை தன்னுடன் எப்போதும் கூடவே வைத்திருப்பவர். கடியம் என்பது நெடுவேட்டுவனது ஊர் ஆகும். இவ்வூர் கோடைமலைக்கடியில் உள்ளது.



# 4. வீரவெஞ்சமன்



<u>களப்பிரர்களை புறங்கண்ட வீர வெஞ்சமன்</u>

கொங்கு தேசத்தை ஆண்ட கொங்க மன்னர்களுள் வீர வெஞ்சமன் என்பவர் 5-ஆம் நூற்றாண்டில் வெஞ்சமாங்கூடலூரை தலைநகராக கொண்டு ஆண்டு வந்தவர். இவர் வேட்டுவக்கவுண்டர் இனத்தை சார்ந்தவர். இவர் ஒரு மிகச்சிறந்த சிவபக்தர். சேர,சோழ,பாண்டிய மூவேந்தர்களையும் பிடித்து சிறைக்கூடத்தில் வைத்த அச்சுதன், பரசுராமன், களப்பாலன் ஆகிய நான்கு ராஜாக்களையும் எதிர்த்து போர் செய்து வெற்றி கனிந்து சிறப்பு பெற்று வந்த வெஞ்சமன் வேட்டுவராஜக்களுடைய காணியும் பூமியும் கொங்குநாடு என கல்வெட்டு சாசனம் செய்துகொண்டார். சமணப் படைகளான களப்பிரர்களை புறங்கண்டு சைவத்தை கொங்குநாட்டில் நிலை நிறுத்தினார். கொங்கேழு சிவத்தலங்களில் ஒன்றான வெஞ்சாமங்கூடலூரில் உள்ள விருகிதீஸ்வரர் எனும் சிவாலயத்தை அமைத்தார். சோழமன்னனுக்கும், வெஞ்சமனுக்கும் எல்லைப் பிரச்சனை இருந்தது. ஏழு முறை போர்தொடுத்து தோல்வியுற்ற சோழமன்னன் எட்டாவது முறையாக சூழ்ச்சியால் தான் இவரை வென்றான். இவரை வென்ற சோழமன்னன் இவரின் வீரத்தை பாராட்டி நடுகல் நட்டும், கல்வெட்டு செதுக்கியும் வைத்துள்ளான். இவருக்கு கொங்குநாடு வேட்டுவக்கவுண்டர் இன மக்கள் சிலையும் மணிமண்டபமும் வெஞ்சமாங்கூடலூரில் அமைத்துள்ளனர்.

# 5. செயங்கொண்ட சோழ கொங்காள்வான்



<u>செயங்கொண்ட சோழ கொங்காள்வான்</u>

முதலாம் குலத்துங்க சோழன் ஆட்சி காலத்தில் (கி.பி 1070 -1125) வடகரை நாட்டை சிற்றரசாக இருந்து ஆட்சி செய்தவர். இவர் செம்ப வேட்டுவர் குலத்தை சார்ந்தவர். இவர் கொங்கு நாட்டில் முதன்முதலில் பவானி ஆற்று நீரை குளவாற்றூர் என்ற இடத்தில் நீரைத்தேக்கி (இக்குளம் அட்டி) கால்வாய் வெட்டிய பெருமை இவரையே சாரும்.

முதலாம் குலத்துங்க சோழன் ஆட்சி காலத்தில் (கி.பி. 1070 -1125) 55- ஆவது (1125) ஆட்சி ஆண்டில் சோழ கொங்காள்வான் கொடிவேரியில் பவானி ஆற்றுநீர் பாயும் இடத்தை அகலப்படுத்தி நீரை பெரும் கற்களை கொண்டு தேக்கி கால்வாய் வெட்டினான். இந்த செய்தியை பவானி ஆற்றங்கரையில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. (இக்கல்வெட்டு தற்போது வ.ஊ.சி. பூங்கா அருங்காட்சியகத்தில் உள்ளது)
கொடிவேரி அணை அமைந்துள்ள ஊரின் பெயர் குளவாற்றூர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 6. கொங்குராயர்



## <u>மட்டுக்கடங்காத கொங்குராயர்</u>

கொங்கு 24 நாட்டில் மண நாட்டை ஆண்டவர் கொங்கு ராயர். இவர் வெங்கச்சி வேட்டுவர் குலத்தை சார்ந்தவர். மட்டுக்கடங்காத மண நாட்டான் என்று கூறுவார். கடவுடளிடம் வாள்முனையில் வீரத்தை வரமாக வாங்கிய கொங்கு ராயன் என அழைக்கப்படுவார்.

இவர் செங்கோல் கொண்டு ஆட்சி புரிந்தவர். கொங்கு நாட்டில் மைசூர் உடையார் ஆட்சி வராமல் இருக்க நஞ்சராயரை எதிர்த்தான். கொங்கு நாட்டில் உள்ள சில மன்றாடியர்கள் வஞ்சகத்தால் சூழ்ச்சியால் அவர்களின் உதவியால் விசயமங்கலத்து கண்ண பறையர் என்ற கைக்கூலியால் வெட்டிக்கொல்லப்பட்டார்.